## செலசினே தொலைக்காட்சி நிறுவனம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்காக அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது தீர்மானங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை திகதி வரை பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையிலாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19,185,720 ஆன ஆதனங்கள், கிரயம் மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தன. அதில் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் சொத்துக்களை இனங்கண்டு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் பயன்படு ஆயுட்காலம் மதிப்பீடு செய்யப்பட்டு மீண்டும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பயன்படுத்தப்பட முடியாத சொத்துக்களை கைதவிரப்பு | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பந்திக்கமைய பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்வதற்கும் பொருட் பதிவேட்டிலிருந்து பதிவழிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிறுவகத்தின் உத்தியோகத்தர் ஒருவரால் நிறுவனத்திற்கு எதிராக தொடர்ந்த வழக்கொன்றின் தீர்ப்பின் பிரகாரம் குறித்த உத்தியோகத்தருக்கு ரூபா 992,080 தொகை 2019 யூலை 03 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 06 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம் இதனை நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கையில் அது தாமதம் காரணமாக உள்ளடக்க முடியாமல் போனது. நிதிஏற்பாடு செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஐந்தொகை திகதியின் பின்னர் நிகழ்ச்சிகளின் தன்மையின் பிரகாரம் பொருத்தமான வகையில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 11,119,014 ஆக இருந்த போதும் ரூபா 11,919,393 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 800,379 கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பணிக்கொடை மிகை ஒதுக்கீடு ரூபா 800,379’ தொகை முன்கொண்டு வரப்பட்டு இலாப நட்டக் கணக்கிற்க சீராக்கப்பட்டு சீர் செய்யப்பட்டது. | பணிக்கொடை ஒதுக்கீடு சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 8,602,172 | விரிவான அட்டவணை | சொத்துக்கள் தொடர்பான அவற்றின் பயன்படு ஆயுட்காலம், மதிப்பீட்டு பெறுமதி, திரட்டிய பெறுமானத்தேய்வு குறிப்பிடப்படும் முழுமையான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக விரிவான அட்டவணையொன்று பேணப்பட வேண்டும். |

### 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 451,976,993 ஆக இருந்ததுடன் அதில் 03 ஆண்டுகளை மிகைத்த கடன்பட்டோர் மீதி ரூபா 102,655,375 அதாவது மொத்த கடன்பட்டோர் மீதிகளில் மொத்த கடன்பட்டோர் மீதியில் 23 சதவீதம் ஆக இருந்தது. இம்மீதிகளில் அறவிடுவதற்கு போதியளவு நடைமுறைகள் பின்பற்றப்படாதிருந்ததுடன் 2019 யூலை 31 ஆந் திகதி வரை அதில் ரூபா 100,024,268 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 451,976,993 ஆக இருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட 03 ஆண்டுகளை மிகைத்த கடன்பட்டோர் மீதியான ரூபா 102,655,375 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடனை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதி ரூபா 51,372,048 ஆக இருந்ததுடன் அதில் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இருந்து வரும் ரூபா 36,422,506 ஐ தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய செலுத்த வேண்டிய கொடுப்பனவு தொடர்பாக சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக்கொண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய கணக்குகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 105 மற்றும் 109 | 2017 ஒக்தோபர் காணாமல் போயிருந்த ரூபா 94,900 கிரயமான கெமறாவொன்று தொடர்பாக புலனாய்விற்காக நியமிக்கப்பட்ட குழுவின் 2017 | இக்கடனை அறவிடுவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உரிய | குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திசெம்பர் 19 ஆந் திகதிய அறிக்கையின் பிரகாரம் ரூபா 118,625 ஆன நட்டமொன்றை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் 2019 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரையலும் அந்நட்டத்தை அறவிடுவதற்கும் பொருட் பதிவேட்டிலிருந்து பதிவழிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தரப்பினரிடமிருந்து தாமதமின்றி அறவிடுவதற்கும் பொருட் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய PFD/RED/01/04/2015/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 23 சந்தர்ப்பங்களில் பதவி நிலைத் தரமல்லாத 8 ஊழியர்களுக்கு முற்பணமாக ரூபா 494,662 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 100,000 ஆன ஆகக்கூடியதை மிகைத்து ரூபா 3,374,500 ஆன முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | தாபன விதிக்கோவையின் செயற்பாடுகளுக்காக மாத்திரம் பதவி நிலைத்தரமல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் தற்போது சீராக்கம் செய்யப்பட்டு பதவி நிலைத் தர உத்தியோகத்தருக்கு வழங்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முற்பணத்தை வழங்குதல் மற்றும் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 396 | ரூபா 106,735 ஆன 06 மாதங்களை விஞ்சிய 9 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ/05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | திறைசேரி அங்கீகாரமின்றி உபசரிப்பு படிகள், விற்பனை படிகள் மற்றும் வருகை படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,553,256 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இப்படிகள் கொடுப்பனவிற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்று மேற் கொள்ளப்பட்டுள்ளது. | படிகள் கொடுப்பனவிற் காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | | | |
| (i) | 6.5.3 ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2019 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆண்டறிக்கை வெகுசன ஊடகத்துறை அமைச்சிற்கு சமர்ப்பித்து அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டறிக்கை விரைவில் பாராளுன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமம். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 8.2.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு ஆண்டிற்குமுரிய வருமான மிகை திறைசேரிக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் மிகை ரூபா 29,704,437 மற்றும் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,210,437 ஆக இருந்தது. | நிறுவகம் அரசின் திறைசேரியிடமிருந்து எவ்வித பணமும் பெற்றுக்கொள்ளாமல் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அதன் செயற்பாடுகளிலிருந்து உழைத்த மிகை எதிர்காலத்தில் நிறுவகத்திற்காக கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ளல், ஏனைய சொத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மிகை வருமானம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 8.2.2 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் அங்கீகாரம் இல்லாமல் ரூபா 20 மில்லியன் கூட்டுத்தொகையான 3 வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | கௌரவ அமைச்சரின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு வரிசை அமைச்சினூடாக வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன். | முதலீட்டிற்காக நிதி அமைச்சரின் முன் அங்காரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | 8.3.3 ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் 140 நாட்கள் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் உபகார படிகளாக ரூபா 1,293,348 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் உபகாரக் கொடுப்பனவு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் உபகாரப் படிகள் செலுத்த வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தொலைபேசிப் பட்டியலகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் நிலையான நிலையான படியொன்று சம்பளத்துடன் சேர்த்து மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 1,492,200 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 03 | நிறுவகத்தில் மூன்று நிறைவேற்ற மட்ட உத்தியோகத்தர்கள் காணப்படுவதுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக ரூபா 9,000 மாதாந்த உரித்துக் காணப்பட்ட போதும் ரூபா 7,000 செலுத்தப்படுகின்றது. ஏனைய உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிகையின் பிரகாரம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பட்டியல் மீள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்காக சுற்றறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட படிகளுக்கு முரணாக ரூபா 88,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் நிறைவேற்று தரமல்லாத பதவியணியினருக்காக ரூபா 467,999 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 5,000 குறிப்பிடப்பட்ட தொலைபேசி படிகள் உரிய வகையில் வழங்கப்பட்டிருந்தன. | |
| (உ) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(I) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை | சகல அரச நிறுவனங்களிலும் பிரஜைகள் சாசனத்தை தயாரிப்பது இடம்பெற வேண்டிய போதிலும் நிறுவனத்தால் பிரஜைகள் சாசனம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிரஜைகள் சாசனத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரஜைகள் சாசனம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 29,704,437 ஆன இலாபமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,210,437 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 28,494,000 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்காக வருமானம் குறைவடைந்த போதும் அதற்கு ஒப்பாக நேரடிச் செலவினம் மற்றும் விற்பனை மற்றும் விநியோக செலவினம் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் ரூபா 637,351,163 முதல் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 597,861,538 வரை ரூபா 39,489,625 ஆல் அதாவது 6 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. எனினும் ஏனைய வருமானம் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 4,379,747 முதல் மீளாய்வாண்டின் போது ரூபா 13,822,647 வரை 215 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே நேர் செலவினம் முன்னைய ஆண்டின் போது ரூபா 541,297,910 இலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 490,793,242 வரை ரூபா 50,504,668 ஆல் அதாவது 9 சதவீதத்தினாலும் விற்பனை மற்றும் விநியோக செலவினம் முன்னைய ஆண்டின் போது ரூபா 26,231,866 இலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 21,892,667 வரை ரூபா 4,339,199 ஆல் அதாவது 17 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அச்சீட்டு நிறுவனமொன்றை நிறுவும் நோக்கில் ஓராண்டு காலத்திற்கு கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 480,000 தொகை 2016 நவம்பர் 15 ஆந் திகதி வெளித்தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக்கட்டிடம் பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைமைக்கு அமைக்கப்படாதிருக்கையில் உரிய பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் குத்தகையாளருடன் உடன்படிக்கை யொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. ஆதலால் அச்சீட்டு நிறுவனமொன்றை நிறுவும் நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 400,000 ஐ மீண்டும் அறவிடுவதற்கும் முடியாமல் இருந்தது. | இதற்கு முன்னர் காணப்பட்ட நிர்வாக அதிகாரியால் கட்டிடமொன்றை வாடை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 480,000 வெளித்தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அக்கட்டிடம் முறைப்படி பூர்த்தி செய்து கையளித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. பின்னர் காணப்பட்ட நிர்வாக அதிகாரி இக்கட்டிடம் தேவையற்றதென தீர்மானிக்கப்பட்டது. குறித்த தொகையில் ரூபா 80,000/= ஐ பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எஞ்சிய பணத்தை பெற்றுக்கொள்வதற்காக சட்டத்தரணி ஒருவர் மூலம் வழக்கு தொடருவதாக அறிவித்து கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவகத்தின் கடமைகளின் பிரகாரம் சாத்திவள ஆய்வொன்றின் அடிப்படையில் திட்டங்களை தயாரித்தல் மற்றும் செலவினங்களை மேற்கொள்ள முன்னர் முறையான உடன்படிக்கையொன்றுக்கு வர வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இந்நிறுவனம் 2001 திசெம்பர் 20 திகதி மஹாவலி அதிகார சபையிடமிருந்து வெகுசன தொடர்பு அமைச்சிற்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும், அதன் குறிக்கோளும் கருமங்களும் உறுதிப்படுத்தி அதிகாரத்தினை செயற்படுத்து வதற்காக அதிகாரச்சசட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதும் சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நிறுவனம் ''செலசினே லிமிடட்'' என கம்பனிச் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி | 2018 ஆம் ஆண்டின் போது அரசிற்குரிய " பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனயொன்றாக பதிவுசெய்வதற்கும் உரிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அதற்காக அமைப்பு விதியெயான்ற தயாரித்து பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் நிதி | நிறுவனத்தை கூட்டிணைக்கும் செயற்பாடுகள் துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றாக பதிவு செய்வதற்காக 2009 ஆண்டு முதல் செயற்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அந்நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை. | அமைச்சரின் பணிப்பாளர் நாயகம் (சட்டம்) பரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2010 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய 10/1682/407/014 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களின் விளம்பரங்கள் மற்றும் பிரச்சார செயற்பாடுகளை செலசினே நிறுவனத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும் அதற்காக தேவையான மனிதவள மற்றும் பௌதீக வளங்கள் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 9 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் தனியார் நிறுவனங்களுக்கு உப ஒப்பந்தம் வழங்குவது நிறுவனத்தின் பொதுவான நடைமுறை யொன்றாக இருந்தது. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 7 தயாரிப்பு செயற்பாடுகளுக்காக ரூபா 37,418,546 ஆன வருமானமொன்று கிடைத்திருந்த போதும் அந்நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்காக ரூபா 24,285,418 தொகை வெளித்தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலஎல்லைில் தொடர்ந்தும் நட்டத்துடன் நடாத்திச் செல்லப்பட்டிருந்தமைய ால் மூலதன சொத்துக்களான கமறெ உபகரணங்கள் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. ஆதலால் வெளித்தரப்பினரிடமிருந் து இந்நடவடிகை நிறைவேற்றுவதற்கு நேருவதாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். | மனித மற்றும் பௌதீக வளங்கள் தேவைப்பாடு திட்டமிடப்பட்டு அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தின் தலைவருக்காக வாடகை அடிப்படையல் வாகனமொன்று பெற்றுக் கொண்டு 2017 யூலை தல் 2018 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்காக ரூபா 1,150,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 | நிறுவகத்தின் தலைவருக்கு வழங்கப்பட வேண்டிய பொருத்தமான வாகனமொன்று நிறுவனத்திற்குச் சொந்தமாக இல்லாமையால் வாடகை அடிப்படையில் தலைவருக்காக வாகன மொன்று வழங்குதல் | பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் ஏனைய உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மார்ச் 17 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் அதற்குரிய திரைசேரியின் முன்அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்த துடன் சுற்றறிக்கையின் 2.3 (I) ஆம் பநித்கது முரணாக 8,864 கி.மீ ஓட்டத்தில் ஈடுபட்டிருந்த வாகனமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகம் மற்றும் குத்தகையாளருக்கு இடையே முறையான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வழங்குனர் தெரிவின் போது முறையான பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டது. இதற்காக திறைசேரியின் அங்கீகாரம் வழங்குமாறு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வாகனத்தை பெற்றுக் கொள்ளும் போது பெறுகை செயற்பாடுகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுப்படுவதுடன் ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனத்திடமிருந்து வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிடுகின்றேன். | |
| (ஆ) | நிறுவகத்தினால் பெறுகை வழிகாட்டல் பின்பற்றப் படாமல் வாடகை அடிப்படையில் கட்டிட மொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு 2016 ஆகஸ்ட் முதல் 2017 யூன் வரை மாதமொன்றுக்கு ரூபா 120,000 வீதம் ரூபா 1,281,290 ஆன வாடகை மற்றும் ரூபா 720,000 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், நிதிப்பிரமாணம் 835(இ) பிரகாரம் மாதாந்த வாடகை பெறுமதியை தீர்மானிப்பதற்காக அரசன் விலை மதிப்பாளரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 947 ஆம் இலக்க உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு தரப்பினரால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுமானால் 3 மாதங்களுக்கு முன்னர் எழுத்துமூலம் மற்றை தரப்பினருக்கு அறிவிக்க வேண்டிய போதிலும் 2017 யூலை 01 ஆந் திகதி முதல் | நிகழ்ச்சிகளுக்காக போதியளவு இடவசதிகளை தற்போதய கட்டிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியாமையால் அதற்காக பொருத்தமான கட்டிடமொன்றை குறுங் காலத்திற்காக பெற்றுக் கொள்வதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டது. குறித்த கட்டிடத்தை மதிப்பீடு செய்வதற்கு போதியளவு காலம் இல்லாமல் இருந்ததுடன் அதுவரை கையளிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி கடமைகளை நேரத்திற்கு மேற்கொள்வதற்கு தேவையாக இருந்தது. | தேவைப்பாடுகள் முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கை இரத்துச் செய்வதாக தலைவரால் ஒரு தரப்பினருக்கு அறிவிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 640,000 தொகையான முற்பணம் மீள அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | நெவில் பெர்னாந்து தனியார் வைத்தியசாலையை அரசாங்கத்திற்கு பொறுப்பேற்பதற்குரிய நிகழச்சியை ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகள் ரூபா 13,575,000 தொகைக்கு நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரதான ஒழுங்கு படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ரூபா 4,544,500 ஆன மதிப்பீடொன்றுக்கு தனியார் நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டிருந்த போதும் அதற்காக பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. தெரிவுசெய்யப்பட்ட வழங்குனரின் மாதிரிப் பட்டியலில் அந் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்த ரொருவரால் கையொப்பமிடாதிருக்கையில் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்விழாவிற்காக இனங்காணப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 5,380,345 ஆக இருந்த போதிலும் சுகாதார அமைச்சிற்கு கூறுவிலை சமர்ப்பிக்கும் போது ரூபா 13,575,000 அதாவது 152 சதவீதமான இலாபமொன்று சேர்க்கப்பட்டு கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அம்மதிப்பீட்டிற்காக சேவை நாடுனரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அங்கு நிறுவகத்திற்கு ஏற்பதற்கு நேரும் எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தை கருத்திற் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன் இறுதியில் கூடிய இலாப எல்லையொன்று அதன் மூலம் பெற்றுக்கொள்ள முடிந்தது. | பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட்டு பெறுகை செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4 ஆம் பிரிவு மற்றம் மேலதிக இல. 28 இன் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட சேவைகள் பெறுகைக்காக பெறுகை குழுவொன்று நியமிக்கப்பட | கடந்த காலப்பகுதியில் நிறுவனத்திற்கு மிகவும் குறுகிய காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கு செயற்பாடுகள் கையளிக்கப்பட்டதால் பெறுகை வழிகாட்டல் | பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட்டு பெறுகை செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 03 அச்சிடல் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வெளித்தர்பபினரைத் தெரிவுசெய்யும் போது பெறுகை வழிகாட்டல் கோவை பின்பறப்படாதிருந்ததுடன் ரூபா 5,041,219 வெளித்தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | செயற்படுத்தப்படவில்லை. | |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மூன்றாவது நடுத்தர மட்ட முகாமைத்துவ மட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியினர் 05 பேராக இருந்த போதும் நிறுவகத்தினால் 06 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறே ஒப்பந்த அடிப்படையில் 39 பேர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமொன்ற இல்லாமல் 13 பேர் கூடுதலாக ஆடுசேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். 2015 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தினால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்ற தயாரிக்கப்பட்டு முகாமைத்துவு சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய திருத்தம் செய்யப்பட்டு ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக்கொள்வதற்கு 2019 ஒக்தோபர் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை. | நிறுவகத்திற்கு எவ்வித வகையிலும் நிதி உதவியொன்று அரசிடமிருந்து கிடைக்காமல் இருந்ததுடன் தற்போது அரசிடமுள்ள ஒரே விளம்பர நிறுவனமும் இதுவாகும். ஆதலால் தனியார் துறையுடன் போட்டியிட்டு நிறுவனம் சேவைகளை வழங்க வேண்டியிருந்தது. ஆதலால் கூடுதலாக ஒரு முகாமையாளர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. தற்போது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மனிதவளங்கள் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வொன்றின் பின்னர் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை யொன்றை தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவகத்தின் கடமைகளின் பிரகாரம் பதவியணியினர் தேவைப்பாடு எதிர்வு கூறப்படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எல்லைக்குள் மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தங்கள் மேற்கொள்ளும் செயற்பாடுதுரிதப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய DMS/1595 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் தொடர்புபடுத்தப்பட்ட செலசினே நிறுவனத்தின் பதவியணியினர் மீள் ஒழுங்கு படுத்தலுக்கான கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் விற்பனை நிறைவேற்று பதவிக்காக 6 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் மாதந்த சம்பளத்தை தீர்மானிப்பதற்காக பதவிக்குரிய ஆட்சேர்ப்பு தகைமை மற்றம் அனுபவம் தொடர்பான தகவல்கள் உரிய திணைக்களத்திற்கு வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் நிறுவகத்தினால் குறித்த தகவல்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு சம்பளம் அங்கீகரிக்கப்டபமல் 03 உத்தியோகத்தர்களுக்கு சேவையில் ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 1,498,646 ஆன சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அந்த கடிதத்தில் கோரிய தகவல்களை அப்போதிருந்த நிர்வாக தரப்பினரால் தாமதமின்றி அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு சம்பளம் கொடுப்பனவு செய்யப் வேண்டும். |

4. **நல்லாளுகையும் கணக்களிபொறுப்பும்**

4.1 **நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 யூலை 02 ஆந் திகதிய பீஈடி12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 05 மாதங்கள் 05 நாட்கள் தாமதத்தின் பின்னர் .2019 ஆகஸ்ட் 05 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இத்தாமதங்களை தவிர்த்து நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும். | நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிகை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி

### நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடு களின் 2030 ''நிகழ்ச்சிநிரலின்'' பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் மீளாய்வாண்டிற்குரிய நிறுவனத்தினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்தி ருக்காததன் காரணமாக அச்செயற்பாடுகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மைல் கல்லையும் இலக்குகளையும் மதிப்பீடு செய்வதற்காக குறி காட்டிகளும் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சிநிரலின்'' பிரகாரம், நிறுவகத்தினால் இனங்காணப்பட்ட நோக்கங்களுக்காக பங்களிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் அவதானிக்கப்பட வேண்டும். |